**30. அநசூயை கதை (2)**

இவளுடைய கற்பின் சிறப்பு விண்ணவர்களாலும் பாராட்டிப்பேசப்பட்டது. இவளுடைய கற்பு நலத்தை ஆராய்தற்கு வந்த முத்தேவர்களும் இவளுடைய பெருமை



யால்குழந்தைகளாகும்படியாக நேர்ந்தது. இவளுடைய கணவராகிய அத்திரிமுனிவர் காடொன்றிலே தங்கிப் பலஆண்டுகள் கடுமையான தவத்தைச்செய்து கொண்டிருந் தார். அப்பொழுது நாட்டிலே மழை பெய்யவில்லை. அதனால் மக்களனைவரும் தண்ணீர் அகப்படாமல் மிகுந்த துன்பப் பட்டார்கள். அப்பொழுது இவ்வம்மைதன்னுடைய கணவ னைத் தொழுது மழைபெய்யவேண்டுமென்று வேண்டினாள். நல்ல மழைபெய்து நாடுமகிழ்ந்தது. மக்கள் இவளுடைய கற்புச் சிறப்பை எண்ணி வியந்தனர். கணவனையே தெய்வம் என்றுதொழுகிறவள் மழைபெய் என்று சொன்னாலும் மழையானது தவறாமற் பெய்யும் என்பதை உலகினர் இக்கற்புக்கரசியினால் நன்கு அறிந்து கொண்டனர்.

(கற்பின் சிறப்பு]

(சிவபுராணம்)